வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2040/ஆ1/2024 நாள். .07.2024.

பொருள் : 01.01.2024 – இல் உள்ளவாறு அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்த முதுகலை பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் /உடற்கல்வி இயக்குநர் ( நிலை – 1) / அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் / தேர்ந்தோர் பட்டியல் – தயார் செய்ய கருத்துருக்கள் பெறப்பட்டது – உத்தேச பெயர் பட்டியல் வெளியிடுதல் – சார்பு

பார்வை : 1தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை.6. ந.எண்.26054/டபிள்யு1/இ1/2024 நாள்.24.05.2024
2.வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2040/அ1/2024 நாள்.30.05.2024

-------

பார்வை செயல்முறைகளின்படி 01.01.2024 ஆம் ஆண்டிற்கு அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியல் தயாரிப்பதற்கு ஏதுவாக தகுதியுள்ள அரசு / நகராட்சி முதுகலை ஆசிரியர்கள் மற்றும் அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோரது விவரம் பார்வை 1 – இல் காண் செயல்முறைகள் வாயிலாக கோரப்பட்டு அனைத்து தலைமை ஆசிரியரின் பரிந்துரையுடன் பெறப்பட்டது.

பார்வை 1இன்படி தகுதியுள்ள ஆசிரியர்களின் உத்தேச பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 20023 – 2004 மற்றும் 2004 – 2005இல் ஆண்டில் முதுகலை ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள், பதவி உயர்வு மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக 2015 – 2016 ஆம் ஆண்டு பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக 01.01.2020 நிலவரப்படி பதவி உயர்வு வழங்கப்பட்டு தற்காலிக உரிமைவிடல் செய்தவர்கள் ஆகியோரை சேர்த்து அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் 1 முதல் 13 முடிய மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் 1 முதல் 422 முடிய உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்கான உத்தேச பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்படி உத்தேச பெயர் பட்டியலில் உள்ள சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அனைத்து அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் அந்தந்த பள்ளி விளம்பர பலவகையில் ஒட்டி வைக்குமாறும் இப்பட்டியலில் உள்ள ஆசிரியர்களின் விவரங்களை சார்ந்த ஆசிரியர்களிடமிருந்து சரிபார்த்து திருத்தம், நீக்கம், சேர்க்கை விவரங்களை அனைத்து ஆசிரியர்களின் EMIS ID மற்றும் அவர்கள் பணிபுரியும் பள்ளியின் UDISE Number ஆகியவற்றுடன் 11.07.2024 க்குள் இவ்வலுவலக ஆ1 பிரிவில் நேரிடையாக ஒப்படைக்குமாறும், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை நேரிடையாக முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி உத்தேச பட்டியல் சரிபார்த்து ஒப்பமிடவும் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : உத்தேச பெயர் பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் 632 009

பெறுநர்.
1.மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) வேலூர்.
2.அனைத்து அரசுஉயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.